




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை கொண்டாடுவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.06.2016) நடைபெற்றது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு. அருள்தாஸ் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 399/2016 நாள்: 24.06.2016

**தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டாடுவது தொடர்பாக ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (24.06.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை கொண்டாடுவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.06.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தெரிவித்ததாவது:-

தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை நமது மாவட்டத்தில் இன்று முதல் 03.07.2016 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. 27.06.2016 அன்று ஆசிரியர்களுக்கான குடிநீரின் தரம் பரிசோதனை தொடர்பான பயிற்சி, குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் மற்றும் நீர் பகுப்பு ஆய்வாளர் அவர்களால் நடத்தப்படும் எனவும், இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், பள்ளி மாணவ, மாணவியர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் மூலம் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், 29.06.2016 அன்று ஊராட்சி ஒன்றிய அளவிலான பேரணிகள் நடத்தப்படும். மேலும் நமது மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகள், 55 பேரூராட்சிகள், 95 கிராம ஊராட்சிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்களில் உள்ள குடிநீரின் தரம் பற்றியும், அந்த நீரின் தரத்தை பரிசோதிக்கும் முறைகள் பற்றியும், தரத்தின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

மேலும் நமது மாவட்டத்தில் தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை சிறப்பாக கொண்டாடிட கல்வித்துறை, சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சி, நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு. அருள்தாஸ், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொறுப்பு) திருமதி. ராணி, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு. உமர் முகம்மது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.